**தினகரன் (23.10.2024)**

புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி குடிநீர் திட்டபணிக்கு

# தமிழ்நாடு காகித ஆலை ₹1 கோடி வழங்கல்



▶ தமிழ்நாடு காகித ஆலை நிர்வாகம் சார்பில் புஞ்சை தோட்டா குறிச்சி பேரூராட்சிக்கு திட்ட பணிகளுக்கு ரூபாய் ஒரு கோடிக்கான காசோலையை ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொது மேலாளர் மனிதவளம் கலைச்செல்வன் ஆகியோர் பேரூராட்சி தலைவி ரூபாமுரளி ராஜாவிடம் வழங்கினர்.

வேலாயுதம்பாளையம், அக். 23: தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் குடிநீர்திட்ட பணிக்காக ரூ. 1 கோடி நிதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் தனது சமூகமேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் காகித ஆலையைச்சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதி பொதுமக்களுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளைச் செய்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட 15 வார்டுகளில் உள்ள 63 பகுதிகளுக்கு பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக குடிநீர் குழாய் பதிப்பதற்கும் மற்றும் காவிரி ஆற்றில் புதிதாக கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துவதற்காகவும் ரூ. 1 கோடிக்கான காசோலையை தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் மனிதவள அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் காகித ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொதுமேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், துணைப்பொதுமேலாளர் (நீர் மேலாண்மை) நவநீத கிருஷ்ணன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் ஆகியோர் ரூ. 1 கோடிக்கான காசோலையை புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் ரூபா முரளி ராஜா மற்றும் துணைத் தலைவர் சதீஷ் வழங்கினர்.

**தினத்தந்தி (23.10.2024)**



### காகித ஆலை சார்பில்

# புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு ரூ.1 கோடி வழங்கல்

நொய்யல், அக்.23-

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் தனது சமூக மேம்பாட்டு திட்டத்தின் சார்பில் காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகழூர் ஆகிய ஊராட்சி பகுதிகளை சேர்ந்த பொதுமக்களுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட 15 வார்டுகளில் உள்ள 63 பகுதிகளுக்கு பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக குடிநீர் குழாய் பதிப்பதற்கும், காவிரி ஆற்றில் புதிதாக கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துவதற்காகவும் ரூ.1 கோடிக்கான காசோலையை தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் மனிதவள அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் காகித ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், துணைப்பொது மேலாளர் (நீர் மேலாண்மை) நவநீதகிருஷ்ணன், முதன்மை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ரூபா மற்றும் துணைத்தலைவர் சதீஷ் ஆகியோரிடம் வழங்கினார்கள்.

**தினமணி (22.10.2024)**

# புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு டிஎன்பிஎல் ஆலை ரூ. 1 கோடி நிதியுதவி



டிஎன்பிஎல் ஆலையில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்வில், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவியிடம் ரூ. 1 கோடிக்கான காசோலையை வழங்கிய ஆலை அதிகாரிகள்.

கரூர், அக்.21: டிஎன்பிஎல் ஆலை சார்பில் புஞ்சைத் தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு, ரூ.1 கோடி நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புஞ்சைத் தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட 15 வார்டுகளில் உள்ள 63 பகுதிகளுக்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக குடிநீர் குழாய் பதிப்பதற்கும் மற்றும் காவிரி ஆற்றில் புதிதாக கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துவதற்காகவும் ரூ.1கோடிக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி ஆலையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், துணை பொது மேலாளர் (நீர் மேலாண்மை) நவநீத கிருஷ்ணன் மற்றும் முதன்மை மேலாளர் (மனிதவளம்)சிவக்குமார் ஆகியோர் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் ரூபா மற்றும் துணைத் தலைவர் சதீஷ் ஆகியோரிடம் காசோலையை வழங்கினர்.

இந்து தமிழ் திசை (22.10.2024)



புஞ்சைதோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் சி.ரூபா, துணைத் தலைவர் எஸ்.சதீஷ் ஆகியோரிடம் ரூ.1 கோடிக்கான காசோலையை வழங்கிய புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தினர்.

# புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு டிஎன்பிஎல் ரூ.1 கோடி நிதியுதவி

● கரூர்

புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின்(டிஎன்பிஎல்) சார்பில் ரூ.1 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட 15 வார்டுகளில் உள்ள 63 பகுதிகளுக்கு பொதுமக்களின் பயன்பாட்டுக்காக குடிநீர் குழாய் பதிப்பதற்காகவும், காவிரி ஆற்றில் புதிதாக கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துவதற்காகவும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் ரூ.1 கோடிக்கான காசோலை அண்மையில் வழங்கப்பட்டது.

காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர்(இயக்கம்) எஸ்.நாகராஜன், பொது மேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன், துணை பொது மேலாளர்(நீர் மேலாண்மை) என்.நவநீத கிருஷ்ணன், முதன்மை மேலாளர்(மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் ஆகியோரால், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் சி.ரூபா, துணைத் தலைவர் எஸ்.சதீஷ் ஆகியோரிடம் இந்தக் காசோலை வழங்கப்பட்டது.

தினமணி (19.10.2024)

# மின்கோபுர விளக்குகள் அமைக்க டிஎன்பிஎல் ரூ.11.81 லட்சம் நிதியுதவி



புஞ்சைத் தோட்டக்குறிச்சி பகுதியில் மின்கோபுர விளக்குகள் அமைக்க நிதியுதவியை பேரூராட்சி தலைவர் ரூபாவிடம் வெள்ளிக்கிழமை வழங்கிய டிஎன்பிஎல் ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) கே.கலைச் செல்வன்.

கரூர், அக்.18: புஞ்சைத்தோட்டக்குறிச்சி பகுதியில் மின்கோபுர விளக்குகள் அமைக்க டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.11.81 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குள்பட்ட பகுதிகளில் 15 உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்க நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை ஆலை வளாகத்தில் நடைபெற்றது.

இதற்காக ரூ.11.81 லட்சத்துக்கான காசோலையை ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் புஞ்சைத்தோட்டக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ரூபாவிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி துணைத்தலைவர் சதீஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**காலைக்கதிர் (21.10.2024)**

# உயர்மின் கோபுர விளக்கு டி.என்.பி.எல்., நிதி வழங்கல்

**கரூர், அக். 21-**

கரூர், புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன மனிதவள அலுவலகத்தில், நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில், நிறுவனத்தின் பொது மேலாளர் [மனிதவளம்] கலைச்செல்வன் தலைமை வகித்தார். காகித நிறுவன சமூக மேம்பாட்டு திட்டம் சார்பில் காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய பஞ்., பகுதிகளுக்கு உள்ளடங்கிய பொதுமக்களுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், பு.தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., பகுதிகளில், 15 உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக, 11 லட்சத்து, 81,000 காசோலை வழங்கப்பட்டுள்ளது.

**தினகரன் (22.10.2024)**

புஞ்சைதோட்டாகுறிச்சி

# பேரூராட்சிக்கு ஹைமாஸ் விளக்கு வாங்க ₹11.81 லட்சம் நலத்திட்டநிதி



▶ புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ரூபா முரளி ராஜாவிடம், உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக ரூ.11.81 லட்சத்துக்கான காசோலையை காகித ஆலை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார்.

வேலாயுதம்பாளையம், அக்.22: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு உள்ளடங்கிய பொதுமக்களுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளைச் செய்து வருகிறது.

மேலும், இதன் ஒரு பகுதியாக, கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15 இடங்களில் உயர் மின் கோபுர விளக்குகள் (*High Mast Light*) அமைப்பதற்காக ரூ.11.81 லட்சத்துக்கான காசோலையை பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் ரூபா முரளி ராஜாவிடம் வழங்கப்பட்டது. காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் வழங்கினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி துணைத்தலைவர் சதீஷ் ஆகியோர்களிடம் வழங்கினார்.